மැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: PRE/2024/87 2024.09.17

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

## பல்கலைக்கழகங்களின் பணியாட்குழுவினருக்கும் மாணவ மாணவிகளுக்கும் வாக்களிப்பதை இயலச் செய்யும் வகையில் லீவு வழங்குதல்

அரச துறையிலும் தனியார் துறையிலும் பணிபுரிபவர்களுக்கு, தேர்தல்களின் போது சம்பளம் அல்லது சொந்த லீவு இழப்பின்றி வாக்களிப்பதை இயலச் செய்யும் வகையில் லீவு வழங்குதல் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2024.09.04 ஆம் திகதிய, PRE/2024/65 ஆம் இலக்க ஊடக அறிவித்தல் மீது மீண்டும் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

இந்த சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பின் போது அரச பல்கலைக்கழகங்களின் பணியாட்குழுவினருக்கும் மாணவ மாணவிகளுக்கும் வாக்களிப்பதை இயலச் செய்யும் வகையில் லீவு வழங்குவதற்கு செயலாற்றுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

அதற்கமைய அரச பல்கலைக்கழகங்களின் கீழ் அடங்காத தனியார் பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவகங்களும் தமது பணியாட்குழுவினருக்கும் மாணவ மாணவிகளுக்கும் இந்த வாக்கெடுப்பின் போது வாக்களிப்பதை இயலச் செய்யும் வகையில் லீவு வழங்குவதற்கு செயலாற்றுமாறு இத்தால் வேண்டிக்கொள்ளப்படுகின்றன.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)